

முரசொலி
கலைஞர்
மணிவிழா
மலர்
1984
.84 முரசொலி இதழுடன் இணைப்பு

# கலைஞர்—ஒரு மகத்தான சக்தி!



எனது நெடுநாள் கெழுதகை நண்பரும், உழுவலன்பு பூண்ட தோழருமான கழகக் காவலர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் மணி விழா தமிழ் மக்களின் எழுச்சித் திருவிழாவாகும்.

தமிழ்நாட்டின் இருபதாம் நூற்றுண்டின் அரசியல் வரலாற்றில்— தனிப் புகழ் நிறுத்தியோர் பலர். விடுதலைப் போர் வீரராக, ஆட்சித் தலைவராக, அறிஞராக, கவிஞராக, கலைச்செல்வராக விளங்கியோர் பலர்.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. அவர்கள், விடுதலைப் போராட்ட இயக்கத்தில் தீவிரவாதியாக ஈடுபட்டு, சிறைப்பட்டு, செக்கிழுக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டவர். அவரது தமிழ் ஆர்வமும் ஈடுஇணையற்றது.

தேசியக்கவி பாரதியார், விடுதலை இயக்க உணர்வில் மேலோங்கி நின்று- தனது கவிதையால், கட்டுரையால், பேச்சால், ஆங்கிலேய அரசின் கடும் நடவடிக்கைக்கு ஆளாகி, புதுவைக்குச் சென்று வாழ்ந்து புத்துலகம் உருவாக்கும் கவிதைத் தொண்டை ஆற்றியவர்.



தந்தை பெரியார் அவர்கள்— தேசிய இயக்கத்தில் முனைந்து செயல்பட்டு சமுதாய நிலையை மாற்றி அமைத்திட- சாதிமுறையை ஒழித்தாலன்றி, விடுதலை கிடைப்பினும் மக்களுக்குப் பயன் தராது என்னும் கருத்து கொண்டு 'சுயமரியாதை' இயக்கம் தொடங்கியவர். எல்லா வகை ஆதிக்கத்தையும்— பழமைப் பிடிப்பையும், மூட நம்பிக்கையையும் தகர்க்கப் போராடிய சிந்தனைச் சிற்பி தமிழ்ப் பெரியார் திரு வி.க. அவர்கள். விடுதலை இயக்கத்தில் முன்னேடியாக விளங்கி தொழிலாளர் இயக்கம் கண்டு, செந்தமிழ் நடையில் ஏடு நடத்தி மேடையில் முழங்கி, சமய சமரச உணர்வு வளர்த்து, வாழ்நாளையே மக்களுக்கு ஒப்படைத்த சான்றோர்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள்— அரசியல் தெளிந்த மேதையாக, எதையும் தெளிவுபடுத்தும் வித்தகராக, நிர்வாக வல்லுனராக விளங்கி தென்னாட்டு மூளையாக மதிக்கப்பட்டவர்.

பெருந்தலைவர் காமராசர்— தேசிய இயக்கம் வளர்த்த தொண்டராக —ஒன்பதாண்டுச் சிறைவாழ்வை ஏற்ற தியாகியாக — ஒன்பதாண்டு முதலமைச்சர் பொறுப்பை நடாத்திய தலைவராக, ஆழ்ந்த சிந்தனையுடையவராக, இந்தியாவின் பிரதமரைத் தேர்ந்திடும் வல்லவராக விளங்கிய பெருந்தலைவர்.

கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்கள் இசுலாமிய சமுதாயத்தின் காவலராக, சிறுபான்மை மக்களின் உரிமையை நிலை நிறுத்துபவராக, தமிழ் மொழியின் பெருமையை உணர்ந்தவராக விளங்கிய பெருமகனார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்— தமிழ் இனத்தின் உரிமையைக் காப்பவராக—தமிழ் மக்களிடையே இன உணர்வை வளர்ப்பவராக— இலக்கிய மறுமலர்ச்சிக்கும், சமுதாய எழுச்சிக்கும் வழிகாணும் ஒப்பற்ற எழுத்தாளராக, பேச்சாளராக விளங்கியவர். அவர் ஆற்றிய தொண்டு— மொத்தமாகத் தமிழர்களைத் தலைநிமிர வைத்தது, இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியது. இளந்தலைமுறையைப் புதிய சிந்தனைக்கு ஆளாக்கியது. அவரே இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழர் தலைவராக வடிவம் கொண்டார். ஆனால் அப்படிப்பட்ட அரும்பெரும் ஆற்றல் மிக்க தலைவர்களை எல்லாம் இழந்து விட்ட நிலையில்— இந்த நாள் தமிழகம் தத்தளிக்கின்றது.

இந்த நாள் தமிழகத்தின் — தமிழ் இனத்தின்— இரங்கத்தக்க நிலை— இழிநிலை, எண்ணுந்தொறும் உள்ளம் சுடும்; அவலம் மிகும். இந்த நிலையை மாற்றுவதற்கு, தமிழினம் ஏற்றம் காண்பதற்கு தமிழர்கள் தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்வதற்கு, வாய்த்த இடமெல்லாம் தலை கொடுத்து, ஏற்ற பெற்றி செயற்படும் ஒரு தலைவனாக, தமிழர்களின் நம்பிக்கைக்குரிய தலைவனாகத் தன்னை ஆளாக்கிக்கொண்டிருப்பவர் கலைஞர்.

கலைஞர் தமது பள்ளிப் பருவத்திலேயே பொது வாழ்வில் அடியெடுத்து வைத்து சிறுவயதிலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பயிற்சி பெற்று, இளமையிலேயே பேரறிஞர் அண்ணாவிடம் பற்று வைத்துப் பழகி, அரசியல் பணியில் தேர்ந்து எழுத்தாளனாய், பேச்சாளனாய், நாடக ஆசிரியனாய், நடிகனாய், கழகத் தொண்டனாய், போராட்டத் தளபதியாய் பலப்பல வழித்துறைகளிலும் ஈடுபட்டு, சமுதாயத் தொண்டனாக வளர்ந்து, பலமுறை சிறை வாழ்வை ஏற்று, கொள்கையில் உரம் பெற்று, இலட்சியத்தில் புடம் போட்ட தங்கமாகி, ஆட்சிக் கட்டிலிலும் அமைச்சராகவும், முதலமைச்சராகவும் அமர்ந்து நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி மாற்றுக் கட்சியினர் பாராட்டையும் பலமுறை பெற்றவராகி, வேறெவரும் பெருத ஒரு நிலை என்று கருதத்தக்கவிதத்தில் முதலமைச்சராக இருந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று செயற்பட்டு; இலங்கைத் தமிழர் உரிமைக்குக் குரல் கொடுக்க அதையும் தூக்கி எறிந்துவிட்டு, காலம் அறிந்து செயற்படும்- செயற்படுத்தும் வித்தகராகவிளங்குகிறார் இன்று.

ஒவ்வொரு நாளும் நாட்டு நடப்பை உன்னிப்பாகக் கவனித்து நிலைமைகளைஆராய்ந்து பார்த்து உரிய கண்ணோட்டம் செலுத்தும் ஆற்றல் அவருக்குண்டு. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைவில் கொண்டு உரிய மதிப்பீடு செய்வதும் விளைவுகளை விவரிப்பதும் அவருக்கு கை வந்த கலை. முதலமைச்சராக அவர் நடத்திய நிருவாகம், திட்டமிடுவதிலும் முடிவெடுப்பதிலும்— அவற்றை விரைந்து நிறைவேற்றுவதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை என்னும் பெயர் பெற ஏதுவாயிற்று.

இலக்கியத் தோய்விலும், கலை உணர்விலும் அவரது நெஞ்சம் திளைத்தது என்பதை அவரது பலதுறை எழுத்துக்கள் சான்று பகரும்.

சொலல்வல்லனாய், சோர்விலனாய், அவை அஞ்சானாய், அவையறிந்து சொல்லும் திறன் மிக்கோனாய், நகையாடும் இயல்பினனாய், அவன் விளங்கியதால், அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிதாயிற்று எனலாம்.

சொல்லால், எழுத்தால், செயல்படும் திறத்தால், அவனது எண்ணங்கள், பிறரது உள்ளம் கவர்ந்தன; அவனது பேச்சையும் எழுத்தையும் விருந்தென எதிர்நோக்குவார் எண்ணிக்கை பேரளவாயிற்று.

கப்பலோட்டிய தமிழனைப் போன்று தலைதாழாத மனப்பான்மையை இயல்பிலே பெற்று,

தேசியக்கவி பாரதியைப் போல் இலக்கியத்தில்— கலையில் புதிய பார்வை செலுத்தும் ஆற்றல் பெற்று,

தந்தை பெரியாரின் பகுத்தறிவு நெறியிலே திளைத்துச் சமுதாய சமத்துவ உணர்வை வளர்க்கும் இலட்சியத்தில் உறுதி பெற்று,

தமிழ்ப் பெரியார் திரு. வி.க. அவர்களைப்போல் தொழிலாளர் துயர்துடைக்கும் பணியில் முன்னின்று,

மூதறிஞர் இராஜாஜியைப் போன்று எதையும் நுணுகிக் காணும் கூர்த்த அறிவும், தெளிவுபடுத்தும் திறனும் பெற்று,

பெருந்தலைவர் காமராசரைப் போல் தியாக மனப்பான்மையும்—இயக்கத்தைக்கட்டிக் காக்கும் ஆற்றலும் கொண்டு,

கண்ணியம்மிக்க காயிதே மில்லத் அவர்களைப்போல், சிறுபான்மையோர் நலனைப் போற்றும் உள்ளங்கொண்டு,

பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் தான் தவறாது செயற்பட, அறிஞர் அண்ணாவின் பாராட்டினையே பலமுறை பெற்றிருப்பினும்— அவரது இதயத்தையே இரவலாகப் பெற்று, தமிழ் மக்களிடையே வலம் வருபவர்தான் கலைஞர்.

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்னும் அறிஞர்வாக்கினை நடைமுறையில் பின்பற்றியும், 'ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காண்போம்' என்பதை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டிய இலட்சியமாக ஏற்றுப் போற்றியும், ஜனநாயக மனப்பான்மையுடன், சமதர்ம நோக்கம் நிறைவேற வழிகாணும் குறிக்கோளை ஏற்று நடப்பவர் கலைஞர்.

**பேராசிரியர். க. அன்பழகன்**

'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்னும் அண்ணாவின் கருத்தை முழு அளவில் உணர்ந்து, தேர்தல் களங்களில் உளதாம் வெற்றி—தோல்வி இரண்டையுமே முழுமனதாய் ஏற்று, தமது இலட்சியப் பணியை அயராது தொடரும் பக்குவம் பெற்றவர் கலைஞர்.

கலைஞர் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல— சமுதாயத் தலைவர். அரசியல் நிருவாகி மட்டுமல்ல— புதிய திட்டங்களை நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்தவர்.

கலைஞர் வெறும் எழுத்தாளர் அல்ல, புதிய சமுதாயத்தைப் படைக்கும், சீர்திருத்தத்தைப் பரப்பும் மறுமலர்ச்சி எழுத்தாளர்.

கலைஞர் சொற்பொழிவாளர் மட்டுமல்ல—நீதிக்கு வாதாடும் வழக்கறிஞர். விவாதத் திறனில் தேர்ந்தவர்.

கலைஞர்- கலைத்துறையில் விற்பன்னர் மட்டுமல்ல—- வருங்காலத்தைத் தீர்மானிக்கும் நல்லறிவாளர்.

கலைஞர்— எந்த நிலையில் இருந்தாலும், அந்த நிலைக்குரிய--பொறுப்புக்குரிய கடமையை செய்யத் தவறார். அவரது ஆட்சி நடைபெற்ற போது, பிரதமராக விளங்கிய இந்திரா காந்தியை வரவேற்றுப் பேசும்போது— ''உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' என்று கூறி தோழமை கொண்ட நிலையிலும், கடமையைச் செய்வோம், உரிமையைக் கேட்போம் என்று தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, மத்திய, மாநில உறவுகளைக் காலத்தின் தேவை உணர்ந்து சீர்திருத்தி அமைத்திட, ஏற்ற பரிந்துரைகளை வழங்கிட, முன்னாள் நீதிபதி இராஜமன்னார் குழுவை நியமனம் செய்தார்.

அக்குழு அறிக்கை தந்த பின்னர், அதை அடிப்படையாகக் கொண்டு தமிழகச் சட்டப் பேரவையில் ''மாநிலத் தன்னாட்சி'' உரிமைகளை வழங்கிட வலியுறுத்தும் தீர்மானத்தை- விரிவான விளக்கம் கூறி நிறைவேற்றினார்.

பேரறிஞர் அண்ணாவின் இலட்சியத்தை வெற்றிபெறச் செய்யும் நோக்குடன்

''மாநிலத்தில் தன்னாட்சி;
மத்தியில் கூட்டாட்சி''

என்னும் முழக்கத்தை எழுப்பினார். அந்த முழக்கம் இன்று பல்வேறு கட்சித் தலைவர்களாலும்— பெருமளவு ஏற்கப்படுகிறது என்பதும், அதை வலியுறுத்திட முதலமைச்சர் பலர் முன்வருகின்றனர் என்பதும்— அந்த முழக்கம் எந்த அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதற்குச் சான்றாகும்.

பல்வேறு இன-மொழி மக்களைக் கொண்டதாய் தனித்தனி- சமய மதங்களைப் பின்பற்றுவோரை உள்ளடக்கியதாய், வெவ்வேறு நாகரிகப் பண்பாடுகள் நிலைத்ததாய் --தொலை தூரத்தில் ஒரு துணைக்கண்டமாய் உள்ள இந்தப் பரந்த இந்தியாவில், ஒரு வட்டார மொழியான இந்தியை, அதுவும் வளமும் வளர்ச்சியும் பெறாத நிலையில், இந்தியா ஒன்று என்பதற்கு வேறு எந்த அடையாளமும் இல்லை என்பதற்காக அதையே ஆட்சி மொழியாக்கிட முனைவதையும், அதைப் பிறமொழி பேசுவோர் மீது திணிக்கும் ஆதிக்க முயற்சியையும்—என்றும் எதிர்க்கும் ஈட்டிமுனையாக விளங்குபவர் கலைஞர். பெரியாரும், பேரறிஞரும், அறிஞர் பலரும் தொடங்கிய இந்தி எதிர்ப்புப்போரின் தீ அணையாது காப்பாற்றும் கடமையை ஆற்றுபவர் அவர்.

இதனால் பல்வேறுமொழி பேசும் மக்களின் உரிமை பாதுகாக்கப்படுவதுடன் இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்வும் நாளும் வளர்ந்து வருவது தெளிவு.

கலைஞர் இந்திய நாட்டு ஜனநாயக ஆட்சி முறையே இனி நீடிக்காது; அழிந்து விட்டது என்று சுதந்திர ஜனநாயக உணர்வு கொண்டவர்கள் பலர் கருதி வேதனைப்படும் வகையில் ''நெருக்கடி நிலை'' அறிவிக்கப்பட்டு அதன் கொடுமைகள் வளர்ந்தபோது அதனை எதிர்த்து நின்று—தீர்மானம் நிறைவேற்றி— தடம் புரண்டு சரிந்து போன ஜனநாயகத்தை மறுபடியும் எடுத்து நிறுத்தக் கை கொடுத்து— பொதுத்தேர்தல் நடத்த இசையும் சூழ்நிலையை ஏற்படுத்த வழிகண்ட வித்தகர் ஆவார்.

எனவே கலைஞர் இந்த இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் நிலைத்த தமிழர் தலைவர்களின் வரிசையில் இடம் பெற்றுள்ள தலைவராக மட்டுமின்றி, அவர்கள் விட்டுச் சென்றதால் ஏற்பட்டு விட்ட வெற்றிடத்தை நிரப்பும் பெரும் பொறுப்பு மிக்கவராகவும் ஆகிவிட்டார். மக்களின் இதயத்தில் அவர் பெற்றுள்ள இடம், அந்த முழுத் தகுதியும் உரிமையும் பெற்றவராக அவரை ஆக்கியுள்ளது.

ஆம், கலைஞர் இந்த நூற்றாண்டின் தமிழக வரலாற்றின் ஒரு காலகட்டமாக மட்டுமன்றி திருப்புமுனை ஏற்படுத்தி— மக்கள் வாழ்வை மலரச்செய்யும் ஒரு மகத்தான சக்தியாகவும் ஆகி இருக்கிறார்.

அப்படிப்பட்ட தகுதியும்— ஆற்றலும் வாய்ந்த தமிழினத் தலைவரின் மணிவிழா நாளில் அவரை எண்ணாத, எண்ணி மகிழாத, மகிழ்ந்து வாழ்த்தாத தமிழ் உள்ளமே இருக்க முடியாது.

வாழ்க கலைஞர்!
வெல்க தமிழினம்!

# புது திருப்பம் பிறந்தது

மகுடியில் மயங்கா வானப் பாம்புநீ!
பகைமையின் கழுத்தில் சுருக்கிடும் தாம்புநீ!
கண்போல் தொண்டரைக் கருதி மதிக்கும்
உன்போல் தலைவன் ஒருவனும் இல்லை!
'விடியுமா? நம்மால் முடியுமா?
மடியுமா?' என்று மனம்தவித் திருந்தோம்!
விடியல் வெளிச்சம் விளக்கிய புதுவிடி வெள்ளிநீ! 'உதய சூரியன் வருவான்
துள்ளி!' என்றுநீ சொல்லி வருகிறாய்!
தூண்டா விளக்காய்த் துலங்கிடும் சுடரே!
ஆண்டுகள் அறுபதைத் தாண்டிடும் தலைவனே!
துணிவிலா நெஞ்சிலும் துணிவினை எழுப்பி
மணிவிழாக் காணும் மறவனே! உன்றன்
எழுதுகோல் எமக்கெலாம் தூண்டுகோல்! பகையைப்
பழுது படுத்திப் புரட்டிடும் நெம்புகோல்!
உன்குரல் இன்குரல்; ஒலிபெருக் கிக்கே
தன்மதிப் புணர்த்தும் தமிழ்க்குரல்; திருக்குரல்!
வண்டைச் சுமந்து மலர்அசை வதுபோல்
துண்டைச் சுமந்துன் தோள்அசை கின்றது!
உன்நடை இராணுவ வீரனின் உயர்நடை!
பின்வரு கின்றது தம்பியர் பெரும்படை!
காந்தக் கண்களால் இரும்புக் கோட்டையை
ஏந்தி இழுக்கும் ஏந்தலே! சிவப்பு
மாந்தளிர் மேனி மாந்தனே! பாட்டு
வேந்தனே! தமிழரின் வேதனை தீர்த்திட
வாய்த்தநன் மருந்தே! சுவைத்தமிழ் விருந்தே!
பத்திர மாய்எமைப் பார்த்திடும் நீஉயிர்ச்
சித்திரம்; பலர்க்குநீ விசித்திரம்! உன்றன்
கைத்திறம் படைத்திடும் இனிப்புதுச் சரித்திரம்!
நெருப்பைப் பொசுக்கிடும் நெருப்பே! உன்றன்
விருப்பம் போல்புதுத் திருப்பம் பிறந்தது!
கொக்காய் வளைந்து கூனிக் கிடந்தோம்;
திக்கெல்லாம் புதுக்கொடிக் கம்பமாய் நிமிர்ந்தோம்!

**கவியரசு பொன்னிவளவன்**



# என்றைக்கும் அணையாது

அறுபதென்னும் ஒருயுகமும் நிறைந்தது!—எங்கள்
அருங்கலைஞர் புதுயுகமும மலர்ந்தது!
மறுபடியும் ''உதயசூரியன்'' எழுந்தது!—ஒளி
மறைத்துநின்ற ''இரட்டை இலை'' உதிர்ந்தது!

முறைத்துப் பார்த்த நடிகர்கட்சி
மூன்றில் ஒன்றாய்க் குறைந்தது!— அதை
எதிர்த்துநின்ற கலைஞருக்கே
இரட்டைவெற்றி குவிந்தது!

அண்ணன்தந்த கழகத்துக்கே
அண்ணாநகர் வெற்றி!—காஞ்சி
அறிஞர் தந்த சின்னத்துக்கே
மாயவரம் வெற்றி!—இங்கே

என்னவித்தை செய்தபின்னும்—
எதிரிக்குத்தான் தோல்வி! — இது
இனஉணர்ச்சித் தமிழரெல்லாம்
ஏற்றிவைத்த வேள்வி!

ஏற்றிவைத்த வேள்வி — இனி
என்றைக்கும் அணையாது! இங்கே
வேற்றவர்க்குப் பொதுத்தேர்தலில்
வெற்றியே கிடையாது!—இனி

∴ ∴ ∴ ∴

மாற்றலர்கள் கடல்கடந்தும்
மறைந்தே ஓடி வாழ்வார்!—பெரும்
ஆற்றல்கலைஞர் நூறாண்டுகள்
அருந்தமிழ் நாடாள்வார்!

**கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம்**

# சிங்கம் நீயே!

அஞ்சுகச் செல்வ னும்நீ
அண்ணாவின் தம்பி யும்நீ
அஞ்சாத நெஞ்சி னன்நீ
அழகிரி வழித்தோன் றல்நீ
கெஞ்சாத பெரியா ருக்குக்
கிடைத்திட்ட தொண்ட னும்நீ
பஞ்சாகும் பழம்பஞ் சாங்கம்,
பகுத்தறிவுச் சிங்கம் நீயே!

செந்தமிழ்த் தாயைக் காக்கச்
செந்தீயாய்க் கனன்ற வன்நீ!
இந்தியை எதிர்த்த வன்நீ
இன்னலை ஏற்ற வன்நீ
விந்திய மலைக்குத் தெற்கே
விளங்கிடும் திராவி டத்தின்
சந்ததித் தலைவன் நீயே
சரித்திரச் சோழன் நீயே!

வெண்கலக் குரலோ னும்நீ
வெடிமுல்லைச் சிரிப்போ னும்நீ
கண்ணொளி தந்தோ னும்நீ
கதிரொளி முகத்தோ னும்நீ
கண்ணான தமிழ்ச்ச மூத்தைக்
காத்திடத் துடிப்போ னும்நீ
மண்ணினில் இனமா னத்தை
மறக்காத தலைவன் நீயே!

அணிநலப் பேச்சா ளன்நீ
அருந்தமிழ்ப் பண்பா ளன்நீ
பணியொன்றே மூச்சாய்க் கொண்ட
பகுத்தறிவுச் சூரி யன்நீ
பிணியான கவர்ச்சிப் பேயைப்
பிடித்தோட்டும் பெம்மா னும்நீ!
மணிவிழா நாய கன்நீ
வாழி, பல் லாண்டு வாழ்நீ!


**மு. பி. பா. மணவேந்தன்**

கலைஞரின்

இளம் பருவத்

தோற்றங்கள்







தூக்குமேடை நாடகத்தில் பாண்டியனாக

# காலத்திற்கு வண்ணம் பூசுவான்

**வீ**ரத்தின் விளையாட்டில் வீணையும்
நர்தமும் ஆகி விட்டவன்,
ஈரத்தின் பனித்துளியில் இதயத்தைத்
தோய்த்தெடுத்தவன்.

சோரம் போய்விட்டவர்கள் தந்த சோதனைகள்,
அவன் முன்னே சோர்ந்து தகர்ந்து வீழ்ந்தன!

காராக் கிரக வாழ்க்கையில் ஏற்பட்ட காதல் உணர்வு, அவனை ஒரு இளைஞனுக்கிவிட்டது!

போர்க்களக் கவிதைகளையே அவன் பெரிதும் விரும்பினான்.

சூறாவளியெனப் பாய்ந்து செல்லும் அம்புகளின் சூட்டில், ''வேகத்தின் அரும்புகள்'' மலர்ந்திடக் கண்டான்!

அந்தக் காரணத்தாலே ''அகத்தின்'' அம்ச தூளிகா மஞ்சத்தின் மென்மைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கவில்லை!

அவன் ஒரு கவர்ச்சிப் பொருளல்ல! ஆனால் ஈர்க்கும் சக்தி வாய்ந்த காந்தம்!

நீல வானத்தின் நெடும்பரப்பும், நீலக் கடலின் பெரும் பரப்பும், அளக்கக் கூடியதென்றால், அவன் உள்ளப் பரப்பையும் ஆழத்தையும் அளக்க முயன்றவர்கள் தோற்றுப் போயினர்!

காலைக் கண் விழிக்கும் இனிய மலரின் மார்பைச் சுவைக்கும் துளிகளில், தூய்மைகளில் அவனது இதயத்தின் ''குழந்தையாக'' காணலாம்!

எங்கோ பிறந்தான்! எல்லோருக்குமாக ஆனான்!

''நான் ஏன் பிறந்தேன்'' என சலித்துக் கொள்ளவில்லை, சங்கடப்பட்டதில்லை!

பிறந்ததன் பலனை நாட்டிற்குக் குழைத்து ஊட்டிட முற்றிலுமாக முடியவில்லையே எனத் துடித்துக் கொண்டிருக்கிறான்!

வந்து போகும் வைகறைப் பொழுதுகள், எழும், விழும், மீண்டும் மீண்டும் எழும் உதய சூரியன்கள் அவனில் உருவாக்கிய உணர்வுகள் உலகக் காவியங்கள்!

காட்டாற்று வெள்ளங்கள்,
காட்டுப் பன்றிகள்
நயவஞ்சக நரிகள்,
பிணந்தின்னிகள், நஞ்சுமிழும் நாகப் பாம்புகள்— கொட்டிடும் கருந்தேள்கள்-

இவைகள் மத்தியில் மண ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறான்!

தன்னை ஒப்படைத்துவிட்ட தனயனை தாய், ஆரத்தழுவி அணைத்துக் கொண்டாள்.

அவன், இனி அவனுக்காக இல்லை, அவனிக்காக!

அவன் அனைத்துத் துறையிலும் திருப்புமுனை! சந்திரனுக்கும், சூரியனுக்கும் அமாவாசைக்கும் அவன் திருப்புமுனை!

கணித்துக் கதை சொல்ல மாட்டான்,
கட்டுரை தீட்டமாட்டான்,
கவிதை புனையமாட்டான்.
மாறாக, காலத்திற்கு வண்ணம் பூசுவான். திசை சுட்டுவான்! தீர்க்கத்திற்கு வடிவம் சமைப்பான்!

''ஏமாறாதே, ஏமாற்றாதே'' என்ற சினிமா பாடல் வரிகளோடு இலட்சியத்தைப் பாடையேற்ற மாட்டான்!

அந்த வரிகளைத் தொட்டிலாக உருவாக்கி, பிஞ்சு மழலையாக அதிலே படுத்துக்கொண்டு அவனே தாலாட்டுப் பாடுவான்!

தரணியெங்கும் ஒலிக்கும் அந்தப் பாடல்கள் தூக்க மாத்திரைகளாக இரா!

பூபாள ராகமாக எதிரொலிக்கும்! அவனுக்கென்று ஒரு பேனா! அதுதானா தமிழகத்தின் அடானா!

இளைய தலைமுறைக்கு அவன் ஒரு இறக்கை! பயமின்றிப் பறந்து திரியும் வானம் பாடிகளின் வான் பரப்பாக வையகத்தை நீட்டிக்கிறான்!

அநீதிகளின், ஆணவங்களின், அட்டகாசங்களின் காட்டுக் கூச்சல்கள், அவைகள் கிளப்பிடும் இரைச்சல்கள், அவனது ஏளனங்களைப் பரிசாகப் பெறுகின்றன!



முறைத்தலுக்கு முதலிடம் தரமறுத்தான்! மாறாக முறைக்கும், முனைப்பிற்கும் வாழ்த்துக்களை வாரி வழங்கினான்!

தனது அழிவில் தன்னைப் பின்பற்றுபவர்கள் வாழ முடியும் நிலை பிறக்குமானால், அழிவிலே ஆனந்தங் காண்பவன் அவன்!

ஜனநாயக அமைப்பிற்கு உயிரூட்டம் தந்தவன் அவன்! நிர்க்கதியாகக் கிடந்தவர்களை நிமிரவைத்தவன். வாழ்க்கை முறையாக மாற்றி விட்ட ஜனநாயகக் கோட்டானின் விடிவெள்ளி அவன்!

மக்களின் இதய சிம்மாதனம், அவனது புதையல்!

மற்றவைகள் அவனுக்குச் செல்லாத சில்லறைக் காசுகள்!

அவன் தூண்டில் மீனல்ல! பலரைத் தூண்டிலிலே சிக்க வைத்தவன்!

''பகுத்தறிவு'' அவனுக்குப் பழமுதிர்சோலை!.

''சிந்தனை'' சிலிர்ப்பூட்டும் சிங்காரப் பூங்கா!

காவிய மாளிகையும், ஓவிய மண்டபமும் அவனது இளைப்பாறும் இடங்கள்.

மாண்டொழிந்து போன பழக்கவழக்கங்கள், செல்லரித்த சித்தாந்தங்கள் அவனது விவேகமிக்க வாதங்கள் என்ற பெருநெருப்பில் கருகிச் செத்தன!

கடற்கரையின் வெள்ளிய மணற்பரப்பில் நண்பர்கள் நடுவே நடுநாயகமாக அமர்ந்து கொண்டு—

அவன் விடுத்த உரையாடல்கள், பல நேரங்களில் தாக்கீதுகள்! கட்டளைகள், அன்பின் இழையோடும் கனிவான வேண்டுதல்கள்!

அவனது சிந்தனைகள், சீறிப்பாயும் கருத்தலைகள், லெபனான் பெற்றெடுத்த தத்துவப் புலவன் கலீல் கிப்ரானை நினைவுபடுத்தும். ''**My Country Men**'' என்ற தலைப்பில் இதோ கலீல்:

"What do you seek my Country men? Do you desire that I build for you gorgeous Palaces, decorated with words of empty meaning, or temples roofed with dreams? or Do you command me to destroy what the liars and tyrants have built? Shall I uproot with my fingers . What the hyprocrites and the wicked have implanted. Speak your insane wish"

தமிழகத்தின் கலீல்— கலைஞர்! மணிவிழா காணுகிறார் இன்று!


நெடிய ஆயுளோடு கொடியவர்களின் கொட்டம் அடக்கு!

உனக்கு மணிவிழாக்கள் தொடர்ந்த உணர்ச்சி ஊர்வலங்களாக நடக்கட்டும்!

**நாஞ்சிலார்**



# திராவகத் தேன்



## வைரமுத்து

உன் மீது அடித்த புயல்
திசைமாறி அடித்திருந்தால்
இமயமலே கொஞ்சம்
இடம் பெயர்ந்திருக்கும்

•

உன் மீது அடித்த வெயில்
கடல் மீது அடித்திருந்தால்
பாதிச் சமுத்திரம்
பாலேயாய்ப் போயிருக்கும்

•

நீ◌ோ
புய◌ல்
சவார் செய்தாய்
வெயிலே
சமாதி செய்தாய்

•

எப்படி நீ கற்ருய்
எரிமலேக் குழம்பு தடவி
வெற்றிலே போடும்
வித்தை?

•

நீ ஒரு
விசித்திரக் கலவை:
திராவகமும். தேனும்
சரிவிகிதத்தில்.

•

சுயமரியாதைப் பண்ணேயின்
வீரிய விதையே!
உன்னேப்
பாறைகளுக்கடியில்
பதுக்கி வைத்தாலும்
நிழல் தரும்
விருட்சமாய் அல்லவா
விரிவாய்?

•

தன்மானம் ஒன்றே
உன்
தனிக்கவசம்.
சொல்!
முத்தமிடவாவது
நீ
தலே தாழ்ந்ததுண்டா?

•

அறுபதா? உனக்கா?
அடையாளம் இருக்கிறதா?
நிஜத்தை விசாரிக்க
நீதிமன்றம் கிடையாது
காலண்டர் கூடப்
பொய் சொல்லும் காலமிது.

•

உன்
ரத்தத்தில் கரைந்திருக்கும்
தமிழ்த்தங்கம்
முதுமையின் நரைகளே
முறியடித்து விடுகிறது.

தோல்வி உனக்கொரு
துயரமன்று — அதுபோல்
வெற்றியும் உனக்கொரு
விஷயமன்று.



இலேயுதிர் காலமும்
வசந்தமும் இங்கே
கிளேகளுக்குத்தான்—
வேர்களுக்கல்லவே.

•

நீ
தேர்தலின் வெற்றிக்குப்
பொட்டாய் இருப்பதிலும்
இனத்தின் மார்புக்கு
விழுப்புண்ணய் இரு.

காலத்தின் கணக்கேடு—
விருதுகளே விட்டுவிடும்
விழுப்பண்களேயே அது
விரும்பும்.

•

என்
கால்சட்டைப் பரு◌ ◌முதல்
கனவுகளே வளர்த்த வனே!
காந்த எழுத்தாலே
கண்களுக்குள் இனித்தவனே!

என்
கிராமத்து வானத்தில்
கீதமாய் நிறைந்தவனே!

என். இதயத்தின்
நான்கு அறைகளும்
அந்த
நன்றியால் நுரைத்திருக்கும்.


•

எனக்கு இதயத்தை நேரடியாய்
இறக்கி வைக்கத் தெரியாது
ஆனல்
உன்னே நினேத்து
எப்போதாவது நான் உகுக்கும்
இருதுளிக் கண்ணீர்—
உன் தோளில் விழும்
அத்தனே மாலேகளேயும்
அடித்துக் கொண்டோடி விடும்.









# நினைவும், நிகழ்வும்

கவி. காமு. ஷெரீப்



**1948** ஆம் ஆண்டு.

அப்பொழுது நான் திருவாரூர் மடப்புறத்தில் குடியிருந்தேன்.

கலைஞர் இல்லம் தெற்கு வீதியில்.

திருவாரூர் என்பது கொடிக்கால் பாளையம், மடப்புறம், விஜயபுரம், திருவாரூர் எனும் நான்கு பகுதிகளைக் கொண்டது.

விஜயபுரத்தில் 'கருணாநிதி அச்சகம்' என ஒரு அச்சகம். கருணை எம். ஜமால் அதன் உரிமையாளர். அந்த அச்சகத்தில்தான் ''முரசொலி'' சிறு ஏடாக அச்சாகி வெளி வந்து கொண்டிருந்தது.

நான் ''ஒளி'' எனும் பெயரில் ஒரு திங்கள் இருமுறை ஏட்டினை அதே அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டு வந்தேன்.

அப்பொழுது நான் காங்கிரஸ்காரன். கலைஞர் தி. க.

எனது ஏடு தமிழரசுக் கழகச் சார்புடையது. கலைஞரின் முரசொலி தி. க. வின் கொள்கையை முழக்குவது.

இருவேறு பட்ட கட்சிகளைச் சார்ந்த நாங்கள் நண்பர்களாக இருந்தோம்.

எனது ஏட்டின் அச்சுப் படிகளைப் பார்த்துப் பிழை திருத்தம் செய்வார் கலைஞர். இந்தப் பணியை முரசொலிக்கு நானும் செய்வேன்.

பிழை திருத்தும் பணிக்காக இரவு நேரங்களில் நாங்கள் இருவரும் அச்சகத்தில் தங்கிய நாட்கள் பல!

இருவரும் ஒன்ருகச் சென்று தேநீர் அருந்தி வருவோம். அநேகம் நாட்கள் கலைஞர் வீட்டில் அவர் தம் தாயார் அன்னம் படைத்திட நான் உண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

கருப்புச் சட்டையும் கதர் சட்டையும் கைகோத்துத் திரிவதில் தி. க. காரர்கட்கு வருத்தம் இல்லை. காரணம் அவர்கள் தங்கள் கொள்கையை எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாதென நம்புபவர்கள்.

காங்கிரஸ் தோழர்கள் அப்படியல்ல. சந்தேகவாதிகள். 'கருப்புச் சட்டைக் கருணாநிதியுடன் சேராதே' என என்னை எச்சரித்தார்கள். அவர்கள் சொல்லை நான் ஏற்காது போகவே என்னைக் கதர்ச் சட்டை போட்டிருக்கும் கருப்புச் சட்டைக்காரன் என்ருர்கள்.

இந்தத் தருணத்திலே அன்றையத் தமிழக, இல்லை இல்லை— சென்னை ராஜதானியின் முதல்வராகஇருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினுர்.

இந்தியை முழுமையாக தி.க. எதிர்த்தது. இந்தி கட்டாயப் பாடமாக்கப்படுவதைத் தமிழரசுக் கழகம் எதிர்த்தது.

ஆரம்பத்தில் இந்த வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமல் இந்தி எதிர்ப்பு என்ற அடிப்படையில் தி.க.வும் த.அ.க.வும் மேடைகளில் இணைந்து தோன்றிட வாய்ப்புண்டாயிற்று.

அந்த நாளில் நானும் கலைஞரும் பல ஊர்களில் இந்தி எதிர்ப்பு மேடைகளில் இணைந்து உரையாற்றியிருக்கிருேம்.

நான் இந்தி எதிர்ப்பு அணியில் இருந்த காரணத்தால் என் பகுதியில் உள்ள காங்கிரஸ் அன்பர்கள் ''ஒளி' ஆசிரியர் காமு ஷெரீப் ஒழிக எனச் சுவரில் எழுதி வைத்தார்கள்.

அந்தப் பகுதிக்கு வர நேரும் போது கலைஞர், காட்டூர் ராமையா போன்ற நண்பர்கள் சுவரில் உள்ளதைப் படித்துவிட்டு என் காதுகளில் படும்படியாக ஒளி ஆசிரியர் ஒழிக எனக் கூறிச் சிரிப்பார்கள். அவர்கள் குரல் கேட்டு நான் வருவேன். கலந்து பேசி மகிழ்வோம்.

சிறிது நேரத்தையும் வீணுக்கிடாமல் சிந்திப்பது, எழுதுவது, செயல்படுவது என்பது கலைஞருக்கு அன்றே உள்ள குணம்.

தாய்இடத்தில் அதிகப் பற்றும் பாசமும் பிரியமும் உடையவர் கலைஞர். தாயார் சொல்லுக்குக் கீழ்ப் படிவதில் மகிழ்பவர் அவர். ஆனுல் தனது கொள்கையில் கோட்பாட்டில் தாய் தலையிட்டால் கேட்க மாட்டார்.

கொள்கைச் சிதைவின்றித் தாயார் உரையை மதித்துப் போற்றுவதில் கலைஞருக்கு நிகர் கலைஞர்தான்.

மேடையில் அதிகம் பேசக் கூடாது என்பது தாயாரின் கட்டளை. ஆனுல் உணர்ச்சி வடிவமான கலைஞரால் அச் சொல்லைப் பேணமுடிவதில்லை. எனவே கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மாள் வேறு ஒரு நிபந்தனை விதித்தார்கள். அதாவது பேசிவிட்டு மேடையை விட்டு இறங்கியதும் முட்டை சாப்பிட வேண்டும் என்பது. இதை அந்த நாட்களில் கலைஞர் தவருது கடைப் பிடித்து வந்ததை நான் அறிவேன்.

விஜயபுரத்தில் ஒரு அன்ன சத்திரம் இருந்தது. அதை ஏழை மாணவர்களின் உணவு, உறையுள்ளுடன் கூடிய விடுதியாக மாற்றினுர்கள். ஆனுல் அதில் வழங்கப்பட்ட உணவும் உறையுள்ளும் குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கே வழங்கப்பட்டன. அதை எதிர்த்து தி. க. போர் தொடுத்தது. கலைஞரின் பங்கு அதில் அதிகம். பின்னர் ஏனையோரையும் சேர்க்கின்ருேம் என்ருர்கள். சிலரைச் சேர்க்கவும் செய்தார்கள். ஆனுல் சமபந்தி இல்லை. இதையும் எதிர்த்திட நேர்ந்தது. கலைஞர் இதிலும் பங்கேற்ருர். இக்காலை எழுந்ததுதான் ''தூக்கு மேடை'' நாடகம். இந்த நாடகத்தை நடத்திட அமைத்ததுதான் ''முரசொலி நாடகக் குழு''. இந்த நாடகக் குழு பின்னர் பல நாடகங்களைத தயார்த்து நடத்திற்று. ஆதிக்கவாதிகளை அதிர அடித்தன அந்த நாடகங்கள். பல ஊர்கட்குச் சென்று பல வித மக்கள் மத்தியிலே நாடகங்கள் நடத்தி மேடைகளில் பேசி, பேசும் போதும் நாடகத்தில் நடித்திடும் போதும் மாற்றுக் கட்சிக் காரர்களின் மாச்சரியங்களை ஏற்றுச் சமாளித்து இதயம் ஏற்றவர் கலைஞர்.

கலைஞர் சந்தர்ப்பவாத அரசியல்வாதியல்ல. பதவிகிட்டும் என எதிர்பார்த்து அரசியலில் சேர்ந்தவரல்ல. எந்த இடத்தில் சேர்ந்தால் எந்தப் பதவி கிடைக்கும் என அலைந்தவர் அல்ல. எந்தப் பதவியும் அவரைத் தேடி வருவதே வரலாறு.

மனைவி மருத்துவமனையில் மரணத்தைத் தழுவிய நேரத்திலும் கட்சிப் பணியாற்றிடக் கழகத்தின் கட்டளைப்படி வெளியூர் சென்றவர்.

அவர் அயரா உழைப்பாளி! சுயசிந்தனைவாதி எதையும் எளிதில் புரிந்து கொள்கின்ற ஆற்றல் மிக்க அறிவாளி. பிறரை ஏணியாகக் கொண்டு தான் ஏற்றம் பெற்றிட எண்ணிடாதவர். பிறருக்கு ஏணியாகவும் பயன்பட்டவர்.

மரண பயமற்ற மாமேதை கலைஞர். இந்த வகையில் சாக்ரடீஸ், காந்தி, பெரியார், காமராசர், அண்ணு போன்ற மேதைகளின் வாரிசாக விளங்குபவர்.

கலைஞர் தமிழகத்தை ஆண்ட காலம் பொற்காலம். அவருடைய ஆட்சியை வியந்து போற்றிடாத தமிழனே இல்லை எனலாம். இன்னும் சற்றுவிளக்கிக் கூறுவதென்ருல் அவருடைய ஆட்சி மீண்டும் வந்திடாதா என ஏங்கி எதிர் பார்த்திடாத தமிழ் மக்களே இன்று இல்லை எனலாம்.

கலைஞரின் ஆற்றலை டில்லி அறிந்தேஉள்ளது. பாரதப்பெருந் தலைவர்கள் அனைவரும் புரிந்தே இருக்கின்றனர்.

இந்திய அரசியலிலே மாற்றத்தைத் தோற்றுவித்திடும்ஆற்றல் கலைஞர் ஒருவருக்கேஉண்டு என புரிந்தவர்கள் அவரை எதிர்பார்க்கின்றனர்.

நேருஜியை உலகம் மதித்தது போன்று கலைஞரை மதித்துப் போற்றுகின்ற காலம் தூரத்தில் இல்லை.

சந்தர்ப்பவாதிகள் வருவார்கள். போவார்கள். அரசியலிலே இது சகஜம். நிலையான கொள்கை உறுதிப்பாடு உடைய அரசியல் மேதைகள் என்றும் நிலைத்து நிற்பார்கள். அவர்களை வீழ்த்த நினைக்கின்ற சக்திகள் வீழ்ந்து படுவது திண்ணம்.

தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான- தலைவர்களின் தலைவரான -கலைஞருடன் இளம்பிராயம் தொட்டுப் பழகிட நேர்ந்ததை நினைத்து மகிழ்கிறேன்.

நேற்றுதான் நடந்தது போன்றிருக்கும் நினைவுகளுக்கிடையே கலைஞருக்கு ஆட்டை அறுபது கடந்துவிட்டது என எண்ணும் போது காலத்தின் ஓட்டம் கவனத்திற்கு வருகிறது. விரைந்து ஓடும் கால ஓட்டம் கலைஞரை நூருண்டைக் கடந்த வாழ்வினராகவும் காணட்டும்! தமிழகத்தை மட்டுமின்றி இந்தியாவையே ஆளுகின்ற பிரதமராக கலைஞர் உயரட்டும். அப்பேற்றினைக் காணும் வாய்ப்பினைக் கண்டு பொருமிட எதிரிகளும் இருக்கட்டும்! வாழ்க கலைஞர் நூருண்டு!


''மாடு கட்டிப்போரடித்தால் மாளாது
செந்நெல்'' என்று ஆனை கட்டிப் போரடித்த
அழகான தென் மதுரையில் வளர்ந்த
தமிழுக்குச் சொந்தக்காரரே!
எங்கள் தானைத் தலைவரே
தமிழர்க்கு வழிகாட்டியே!
எங்கள் இதய தெய்வமே —நீ
தமிழ் உள்ளளவும்
தமிழினம் உள்ளளவும்
பல்லாண்டு வாழ்க வாழ்க!
என வாழ்த்தும் உன் அன்பு உடன்பிறப்பு



**வீ. சின்னசாமி பி. ஏ.**

பழக்கடை,
திருவல்லிக்கேணி.



# அண்ணாவுடன் கலைஞர்




# தலைவர் கலைஞருடன் ஒரு நாள்






காலையில் சிறிதுநேரம் பயிற்சி
மகள் கனிமொழியுடன்

தோழமைக் கட்சித் தலைவர்
செழியனுடன் உரையாடல்.






இல்லத்து வாசலில் கழகத்
தோழர்களுடன்

இல்லத்திலிருந்து கட்சிஅலுவ
லகத்துக்குச் செல்லல்.




செய்திப்பத்திரிகை வாசித்தல்






கட்சி அலுவலகத்தில் பொதுச்
செயலாளர், பொருளாளர்,
துணைப் பொதுச் செயலாளர்
மற்றும் செயலாளர்களுடன்
கலந்துரை.






மாவட்டக் கழகச்செயலாளர்
டி.ஆர்.பாலுவுடன்யோசனை



பணிமுடித்து இல்லம் திரும்
புதல்.



உடன்பிறப்புக்கு கடிதம்,
கட்டுரை எழுதுதல்

மகள் செல்வி காலை உணவு
அளிக்கிறார்.






சந்திக்க வருவோரிடம்உரை
யாடல்-தீபம் நா. பார்த்த
சாரதி.

கா ரி ல் ஏ று ம் போதும்
ஆலோசனை.



**மற்றும் பற்பல**
நிகழ்ச்சிகள்,
பொதுக் கூட்டங்கள்

வண்ணப்படங்கள்
யோகா



# தமிழே போல் வாழ்க!

**ப. நெடுமாறன் எம்.ஏ., எம்.எல்.ஏ**

புயல் வீசும் கடலில் கொந்தளிக்கும் அலைகளுக்கு நடுவே மரக்கலத்தைச் செலுத்தும் மீகாமன் போல திராவிட முன்னேற்றக்கழகத்தை கலைஞர் கருணாநிதி வழிநடத்திச் செல்கிறார்.

திறமையான மீகாமன் இல்லாவிட்டால் மரக்கலம் தத்தளிக்கும்; திசை தடுமாறும்; கற்பாறையில் மோதி உடைந்து சிதறும்.

அதைப் போல தமிழகத்தின் அரசியலில் தி.மு. கழகம் என்னும் கலத்தினை பல்வேறு சோதனைகளுக்கிடையே திறம்பட கட்டிக் காத்து வருகிறார் கலைஞர் கருணாநிதி.

எல்லா தலைவர்களிடமும் எல்லாவகையான ஆற்றல்களும் நிறைந்திருப்பதில்லை. பேச்சாற்றல் உள்ளவர்களிடம் எழுத்தாற்றல் கிடையாது. எழுத்தாற்றல் உள்ளவர்களிடம் பேச்சாற்றல் இல்லை. இரண்டும் இருந்தால் தலைமைக்கான தகுதி இல்லை. தலைமைக்கான தகுதி இருந்தால் நிர்வாகத் திறமை இல்லை. நிர்வாகத்திறமையிருந்தால் கட்சி நிர்மாணப் பணிகளில் அனுபவமில்லை. இப்படிப்பட்ட குறைகள் பல தலைவர்களிடம் உண்டு.

ஆனால் கேட்டோரைப் பிணிக்கும் பேச்சாற்றலும், படிப்போரைக் கவரும் எழுத்தாற்றலும், அதிகாரிகளை அயரவைக்கும் நிர்வாகத் திறமையும், கட்சித் தொண்டர்களை உள்ளும்புறமும்அறிந்து ஊக்குவிக்கும் செயல்பாட்டுத் திறனும் ஒருங்கே அமையப் பெற்ற சிறந்த தலைவராகக் கலைஞர் விளங்குவதால்தான் எத்தனையோ சோதனைகளை தி.மு.க. கடந்து வர முடிந்திருக்கிறது.

ஆளும் கட்சித் தலைவராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும் சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய பணி ஒப்புவமை இல்லாதது. ஆளும் கட்சித் தலைவராக இருந்து எதிர்க்கட்சியினரின் தாக்குதல்களுக்கு அவர் ஈடு கொடுத்து சமாளித்த விதமும் அதே சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக வீற்றிருந்து ஆளும் கட்சியினரின் கண்களில் விரல் விட்டு ஆட்டிய துணிவும் சட்டமன்ற வரலாற்றில் அழியாத இடம் பெற்று விட்டன.

சிறு வயதில் தொண்டனுகப் பணியாற்றி அவர் பெற்ற அனுபவம் இன்றைக்கு இலட்சோப இலட்சம் தொண்டர்களின் உள்ளத் துடிப்பினை உடனுக்குடன் உணரக்கூடிய ஆற்றலை அவருக்கு வழங்கியிருக்கிறது.

முரசொலியில் அன்றாடம் அவர் எழுதும் நீட்டோலை கட்சித் தொண்டர்களின் இதய ஒலையாகத் திகழ்கிறது. கட்சித் தொண்டர்களுக்கும் அவருக்கும் உள்ள இணக்கமான உறவின் இரகசியம் இதுவே.

இலக்கியவாதிகளுக்கு நடுவே அவர் ஒரு தாரகையாகத் திகழ்கிறார். இவ்வளவு அரசியல் தொல்லைகளுக்கு நடுவே இலக்கியத்தைப் பற்றிச் சிந்திக்க இவருக்கு நேரம் கிடைத்தது எப்படி என்று வியக்காதவர்கள் இல்லை.

திரைப்படத்துறையில் இவர் பதித்த முத்திரை இன்றளவும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

மாணவப்பருவத்தில் கையெழுத்து இதழைத் தொடங்கி இன்றைக்குப் பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்கிறார் என்றால் இதற்கு அடிப்படை அவரது எழுத்தாற்றல் மட்டுமல்ல, பத்திரிகை உலகின் நுணுக்கங்களை முழுவதும் உணர்ந்து அதில் ஈடுபட்டு, மகத்தான வெற்றியும் பெற்றிருக்கிறார்.

இப்படி துறைதோறும் துறைதோறும் வெற்றிச் சின்னங்களைப் பொறித்து 60-ஆம் ஆண்டைக் கடந்துவிட்ட கலைஞருக்கு பல்லாண்டு பல்லாண்டு கூறுகிறேன்.

தமிழுக்கும், தமிழனுக்கும், தமிழ்நாட்டிற்கும் அவரது தொண்டு தடையின்றித் தொடர வேண்டும்.

சீரிளமைத் திறம் குன்றாத் தமிழே போல் அவர் குறைவின்றி வாழ வேண்டும்.

தமிழே போல் வாழ்க என்று தமிழ் கூறும் நல்லுலகம் அவருக்கு நல்வாழ்த்து கூறுகிறது.

# தமிழகம் தழைக்க..



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி தனது 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, 61–ஐத்துவக்குகிறார்.

அவர் கடந்து வந்த பாதையில் முள் நிறைந்திருந்தது—கண்ணீர் சிந்த வேண்டியதாயிற்று. சோதனைகள் ஏற்பட்டது, அதிலும் துவண்டுவிடாமல் முன்னேறினார்.

உறவு கொண்டிருந்தவர்களோடு உறவு குறைந்தது, முரண்பட்டது. இதிலும் நிலைமை மீறி உறவு மீண்டும் ஏற்பட்டது.

உலைக்களத்தில் காய்ச்சி அடித்த உருக்கு வலுவுள்ளது. இவரது அனுபவங்கள் இவரை உருவாக்கியுள்ளது. இந்த உருக்குத் தன்மையை தமிழகத்தின் எதிர்காலத்திற்கு, முன்னேற்றத்திற்கு அவர் பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டு வாழ்த்துகிறேன்.

தமிழகத்தின் வனவளம், நிலவளம், நீர் வளம், தொழில்வளம் பெருக, உழைப்போர் வாழ அவர் பாடுபட வேண்டுமென வாழ்த்துகிறேன்.


பண்பட்ட 60 ஆண்டுகள் அனுபவம் 61ல் ஒளிவிடட்டும். தமிழகம் தழைக்க, மக்கள் வாழ்வு முன்னேற பண்புள்ள சக்திகளை இணைத்துச் செயலாற்றுவதில் அவர் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**ப. மாணிக்கம்**
செயலாளர்.
தமிழ் மாநிலக் குழு.


CPC

**பிரீமியர்**

ஆழ்கிணறு ஜெட் பம்புகள்



பூமியின் ஆழத்திலிருந்து தண்ணீரை அள்ளித் தருகிறது.

- நிறுவுவது சுலபம்
- உறுதியான அமைப்பு
- குறைவான மின்சக்தி செலவு
- தடையில்லாத இயக்கம்

சிங்கிள் பேஸில் ½, 1 ஹார்ஸ் பவரிலும், மூன்று பேஸில் 1, 2, 3 ஹார்ஸ் பவர்களிலும் கிடைக்கிறது.

**கோயமுத்தூர் பிரீமியர் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.,**
மேட்டுப்பாளையம் சாலை, கோயமுத்தூர்-641 030
போன்: 32100 தந்தி: PREMIERCO
கிளைகள் : 262, அவினசி ரோடு, கோயமுத்தூர்-18 போன் : 24451
173, தம்பு செட்டி தெரு, சென்னை-1. போன் : 28564
15-A/3, மேற்கு வெளி வீதி, மதுரை-1. போன் : 22757
3-A, காலேஜ் ரோடு, திருச்சி-2. போன் : 25030
649, நேரு சாலை, விழுப்புரம்-2. போன் : 2633

# சரித்திரத்தில் முக்கியத்துவம்



சமுதாய வளர்ச்சியில் தனி நபரின் பங்கு பற்றி மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஓர் ஆழமான பார்வை உள்ளது. தனி நபர்களின் அத்தகைய பங்கினை மதிப்பீடு செய்வது இத்தகைய சந்தர்ப்பங்களில் அவசியமாகிறது. அத்தகைய மதிப்பீடு நிறைகுறைகளை ஒருங்கிணைந்த (Integrated) முறையில் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. அது ஒரு வறட்டுத்தனமான கோட்பாடல்ல. சரித்திரத்தை உருவாக்குவதில் மக்களின் பங்கு பற்றியும், அதில் தனி நபரின் பங்கு பற்றியும், துல்லியமாக பொது மக்களுக்கு படிப்பிக்க வேண்டுமென்று மார்க்சியம் வற்புறுத்துகிறது. மக்கள்தான் சரித்திரத்தை உருவாக்குகிறார்கள். சமுதாயவளர்ச்சி விதிகளைப் புரிந்துகொண்டு, அவற்றிற்கேற்ப, மக்களின் இயக்கங்களிலும், போராட்டங்களிலும் தீவிர பங்கு கொள்ளும் தனி நபர்கள் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெறுகின்றனர் என்பதுதான் இப்பிரச்சினையில் மார்க்சியத்தின் அடிப்படை கண்ணோட்டமாகும்.

மற்ற இயக்கங்களின் தலைவர்கள்மட்டுமல்லாமல், எங்கள் இயக்கம்- கட்சி ஆகியவற்றின் தலைவர்களையும் இப்படித்தான் நாங்கள் மதிப்பிட்டு பொதுமக்களுக்கு எடுத்துக்கூற முயற்சிக்கிறோம்.

நம்முடையது போன்ற ஒரு வளர்ச்சியடையும் நாட்டில் நீண்ட காலம் பொதுவாழ்வில் ஈடுபட்டு, மணிவிழா கொண்டாடும் ஒரு தலைவரைப்பற்றிய நிறைகளைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, ஒருங்கிணைந்த முறையில் பரிசீலிப்பது என்ற பெயரால் குறைகளையும் பற்றி குறிப்பிடுவது பொருந்தமானதல்ல என்ற கருத்து நம் சமூகத்தில் பரவலாக இருப்பது தான் எனக்கு சிரமத்தை உண்டாக்குகிறது. எனவே கலைஞர் திரு. கருணாநிதி அவர்களைப் பற்றிய ஒரு முழுமையான மதிப்பீட்டை பிறிதொரு சந்தர்ப்பத்தில் வைத்துக் கொள்ளலாமென்ற எண்ணத்தில், தமிழக அரசியல் வாழ்வில் திரு. கருணாநிதி அவர்களின் சிறப்பமிகு பங்கு பற்றி சில கருத்துக்களை எடுத்துக்கூற முயற்சிக்கிறேன்.

நம்முடைய இந்திய நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் போதும், அதன் பின்னரும் நாட்டின் அரசியல் பொது வாழ்விலும், பொருளாதாரத்திலும், பெருமுதலாளிகளும், ஏகபோக முதலாளிகளும் நிலப்பிரபுத்துவத்துடன் சேர்ந்து ஆதிக்கம்செலுத்தி வந்துள்ளனர். இதன் விளைவாக நமது நாட்டின் அரசியல் சாசனம் ஒன்றுபட்ட சமஷ்டி இந்தியாவை உருவாக்குவதுதான் நோக்கம் என்று கூறிய போதிலும், மத்தியில், அரசியல்- நிதி அதிகாரங்கள் மேலும் மேலும் குவிக்கப்பட்டுவருவதை காண்கிறோம். சுரண்டும் வர்க்கங்களின் நலன்களுக்கு இது தேவை என்பதாலே இத்தகைய அதிகார குவியல் மத்தியில் ஏற்படுகிறது.

மறுபக்கத்தில் மக்களின் நலன்களைக் கருதி அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்றும், மாநிலங்களுக்கு அதிக நிதி— அரசியல் அதிகாரங்கள் கிடைக்க மாநிலசுயாட்சி வேண்டுமென்றும், அதற்கான முறையில் அரசியல் சாசனம் திருத்தப்பட வேண்டுமென்றும், நம் நாட்டில் ஓர் இயக்கம் உருவாகி வளர்ந்து வருகிறது. இந்த இயக்கத்தை உருவாக்குவதிலும், வளர்ப்பதிலும் பல்வேறு ஜனநாயக இடதுசாரி சக்திகள் தீவிரமாக பங்கு கொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டிலும் மத்தியில் அரசியல் அதிகாரக் குவியலை எதிர்த்தும், மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்றும் கூறும் கருத்துக்களை தமிழ் மக்களிடையே பரவலாக எடுத்துச் சென்றதில் திராவிடமுன்னேற்றக் கழகத்திற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. காலஞ்சென்ற திரு. அண்ணாதுரை அவர்களுடன் சேர்ந்து நின்று கழகத்தின் தலைமை தாங்கிய முக்கிய தலைவர்களில் திரு. கருணாநிதி முதன்மையானவர் என்பது தமிழக மக்களிடையே அவர் பெற்றிருக்கும் செல்வாக்கிற்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

பிரதேச மொழிகளின் வளர்ச்சி என்பது மத்தியில் அதிகாரக்குவியல் ஏற்பட்டு வருவதுடன், நெருங்கிய சம்பந்தமான ஒரு பிரச்சினையாகும். சுரண்டும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒரு 'ஏக இந்தியாவை' உருவாக்க முயல்வோர் பிரதேச மொழிகளின் வளர்ச்சி பற்றி அக்கறை காட்டுவதில்லை. அதற்கு மாறாக பலமொழிகளைப் பேசும் மக்களின் மீது ஒரு மொழியை ஆட்சி மொழியாகத் திணிக்க முயற்சிக்கின்றனர். அதனால்தான் இந்தி மொழி பேசாத மக்களிடையே இதற்கு எதிர்ப்பு ஏற்படுகிறது. பிரதேச மொழிகள் வளர்ச்சி அடைந்து மாநிலங்களின் ஆட்சிமொழியாக நிலை பெற்று, அவை தேசிய ஆட்சிமொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். அந்தக் காலம் வரும் வரை, ஆங்கிலமும் இணைப்பு மொழியாக இருக்க வேண்டுமெனவும் அவர்கள் கோருகின்றனர். இந்த முறையில்தான் உண்மையான, ஒன்றுபட்ட இந்திய கூட்டரசை உருவாக்க முடியும். இதற்கு மாறாக இந்தித் திணிப்பு முயற்சியின் விளைவாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பு இயக்கத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் தீவிர பங்கு கொண்டது. ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக நீடிக்க வைக்கும் போராட்டத்தில் அது முன்நின்று வருகிறது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அது தீவிரமாக பாடுபட்டுள்ளது. இந்த இயக்கங்களில் எல்லாம் மறைந்த திரு. அண்ணாதுரை அவர்களுடனும், அவருக்குப் பிறகும் தீவிர பங்கு கொண்டவர்களில் முதன்மையானவர் என்பதும் திரு. கருணாநிதி அவர்களின் செல்வாக்கிற்கு மற்றொரு முக்கியமான காரணமாகும்.

இவ்விதமாக இந்திய நாட்டின்வளர்ச்சிப் போக்கில் தமிழ் மாநில மக்கள் முன் தோன்றிய சில சரித்திரப்பூர்வமான கடமைகளை நிறைவேற்ற முயற்சிப்பதில் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் முக்கிய தலைவர்களில் முதன்மையானவர் என்ற முறையில் திரு. கருணாநிதி அவர்களும் ஆற்றி வரும் பங்கு அவருடைய செல்வாக்கிற்கான ஒரு முக்கியமான காரணமாகும்.

மாநில சுயாட்சி என்பதும், பிரதேச மொழிகளின் வளர்ச்சி என்பதும், பிரச்சார கோரிக்கைகள் என்ற நிலையிலிருந்து மாறி, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் பிரதான கோரிக்கைகளாக- அதிகாரத்தைப் பரவலாக்குவதின் மூலமாக ஜனநாயகத்தை வளர்த்து பாதுகாக்கும் நாடு தழுவிய நடைமுறை இயக்கமாக இன்று உருவாகியுள்ளது. அகில இந்திய எதிர்க்கட்சிகளின் 4வது ஸ்ரீநகர் மாநாட்டுத் தீர்மானங்களும், அவற்றை இன்னும் ஸ்தூலமாக உருவகப்படுத்தியுள்ள கல்கத்தா மாநாட்டு தீர்மானங்களும்- இந்திய மக்களிடையேயும்- தமிழ் மக்களிடையேயும் பேராதரவு பெற்று வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இந்த இரு மாநாடுகளிலும் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் திரு. கருணாநிதி அவர்களும் முக்கிய பங்கேற்றனர்.

பஞ்சாப் பிரச்சினை தீராமல் இருப்பது இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு எவ்வளவு பெரிய ஆபத்தை உண்டாக்குகிறது என்பது பற்றியும், இதில் மத்திய அரசு காலம் தாழ்த்தும் போக்கை விமர்சித்தும் திரு. கருணாநிதி அவர்கள் முரசொலியில் எழுதிய கட்டுரை மிக பயனுள்ளதாக இருந்தது.


இந்திய நாட்டில் மாநிலங்களுக்கு சுயாட்சி- பிரதேச மொழிகளின் வளர்ச்சி- ஜனநாயகம் பரவலாக்கப்படுதல் ஆகிய மக்கள் கோரிக்கைகளை முன்கொண்டு செல்ல- உண்மையான ஒன்றுபட்ட இந்திய கூட்டரசில் அதிக அரசியல், நிதி அதிகாரங்களைக் கொண்ட மாநில சுயாட்சி என்ற லட்சியம் நிறைவேற கோடானுகோடி மக்கள் பங்கு கொள்ளும் இயக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் திரு. கருணாநிதி அவர்களும் தங்களுக்குரிய சிறப்புமிகு பாத்திரத்தை வகித்து, இந்திய ஜனநாயக இயக்கம் வலுப்படவும் செயலாற்றிடவும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்கவென இம்மணிவிழாவின் போது வாழ்த்துகின்றேன்.



ஏ. நல்லசிவன்

மணிவிழா காணும் கலைஞரே! இன்று போல் என்றும் வாழ்க!

## மாறிவரும் காலத்திற்கு ஏற்ற புது புது மோஸ்தர்களில் தங்கம் கல் முத்து பவளம் பதித்த நகைகளுக்கு சிறந்த இடம்




மாற்றுக்குறையாத
புதிய டிசைன்களில்
22CT. தங்க நகைகள்
வாங்கவும். ஆர்டர் நகைகளை
குறித்த காலத்தில் பெறவும்
எங்கள் கடைக்கு
விஜயம் செய்யுங்கள்

போன்: 24801

**ஸ்ரீ R.V.T. ரங்கா ஹால் & கம்பெனி**
ஜுவல்லரி சென்டர்
774, பெரியகடை வீதி, கோயமுத்தூர்-641001.

மௌனி

(ஆர்டர் நகைகள் சிறப்பான முறையில்
தயாரித்துக் கொடுக்கப்படும்.)

---

தமிழன்னையின் தலைமகனே! மங்காப்புகழுடன்
பல்லாண்டு நீ வாழி!

## கரணா புளி அங்காடி

எங்களிடம் கொட்டை நீக்கிய புளி மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்கும்

**கரணா புளி அங்காடி,**
**718 ரங்கே கவுடர் வீதி,**
**கோவை.**

---

''தமிழனென்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா'' என்று கூறி
தமிழர்தம் வாழ்வில்
நெஞ்சுரம் ஏறிய கலைஞரே
நீவீர் பல்லாண்டு வாழ்க!

## Dee Vee Engineering

*171, 9 Th Extension, 100 Feet Road*
*Gandhi Puram*
COIMBATORE - 641012

---

நிலையான தலைவரென ஆகி நிற்கும் கலைஞரே!
தமிழ்நாட்டின் நிலைஉயர்த்த வந்துதித்தவரே
வாழிய நீ வாழி!



## தேவராஜ் ஜுவல்லரி

தங்கநகைகள்
மொத்த சில்லரை வியாபாரம்
கடை நெ. 9 தங்கமகால் பில்டிங்
589 590 பெரியகடை வீதி
கோவை - 641001



---

ஒல்காப் புகழின் ஒப்பற்ற தலைவா!
இன்றெமது இனிய வாழ்த்துக்கள்!

**புதிது புதிது புத்தம் புதிது**
**சுவையது சுவையது சுவையில் மிக்கது**

உயர்தரத்தில் உத்திரவாதமுள்ள

**ஒரு பாக்கெட் 15 பைசா**

3 கப் காபி தயாரிக்க டிக்கேஷன் தந்து உதவுகிறது.
வாங்கி அருந்தி மகிழ்ந்திடுவீர்!
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பு: ஆர். டி. சாமி

## சுவாமி காபி ஒர்க்ஸ்

24, 37 U T. G லைன்,
இடையர் வீதி, கோவை-1.

---

ராஜமன்னர் குழுவை அமைத்து இந்தியாவெங்கும்
மாநில சுயாட்சி கொள்கை எதிரொலிக்கச் செய்து
அரசியல் வானில் சிறகடித்துப் பறக்கும்
மணிவிழா கண்ட கலைஞ, நீ வாழி!

---

ஏழைகளின் நெஞ்சத்தே இடங் கொண்ட தலைவ!
இந்நாள் போல எந்நாளும் நீ வாழ்க!

**எத்தகையோர்க்கும் ஏற்ற பட்டு மற்றும்**
**மில், நூல் புடவைகள், சர்ட்டிங், சூட்டிங்**

ரகங்களுக்கு

புகழ்பெற்ற சிறப்பு ஜவுளி அங்காடி

## V. K. R. ஷோரூம்

2840, ஒப்பணக்கார வீதி, (பள்ளிவாசல் கட்டிடம்)
கோயமுத்தூர் - 641001. போன் : 30158

# கலைஞரின் ஆட்சி சாதனைகளில் சில...




குடிசைமாற்று வாரியத்தை முதன் முதலில் தோற்றுவித்து சென்னை மற்றும் நகரங்களில் 31,654 குடியிருப்புகள் கட்டித்தந்தார்.




தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாக ஒரு லட்சம் வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு ஆட்சிகாலத்தில் 30,389 காங்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட்டது.




மனிதனை மனிதன் இழுக்கும் கைரிக்ஷா ஒழிக்கப்பட்டு சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டது.



கண்ணொளி வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு இலவச கண்சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.



அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ.10000 என அறிவிக்கப்பட்டு அளிக்கப்பட்டது.




எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

# என்றென்றும் வாழி!

தமிழ்வாழ நீ வாழ வேண்டும்—தமிழ்த்
தரைஓங்க நீஓங்க வேண்டும்
இமையாகக் கழகத்தைக் காக்க—கொள்கை
ஏருக நூருண்டு வாழ்க!

பதவிக்கு வணங்காத நெஞ்சம்—பேச்சில
பழக்கூட்டின் சுவைகோடி விஞ்சும்
உதவிக்குக் கைதானே முந்தும்—உன்றன்
உழைப்பேதான் கழகத்தை உந்தும்!

தலைவாநீ தமிழினத் தோள்,தோள்!— அண்ணு
தந்திட்ட தமிழ்காக்கும் வாள்,வாள்!
விலைபேச வருவார்க்குத் தேள், தேள்!—ஏய்க்கும்
வீணர்தாம் உன்முன்னே தூள்,தூள்!

மணங்கோடி குழைகின்ற அன்பர்—காலை
மலர்கோடி சிரிக்கின்ற அழகர்
இனம்நாடித் துதிக்கின்ற அறிவர்—பெரியார்
எழுச்சிக்குப் புகழ்சேர்க்கும் மறவர்

மணிவிழாக் கண்டாய்நீ வாழி—பல,
மலர்கின்ற நலங்கொண்டு வாழி!
அணிவிழா பலகண்டு வாழி—தமிழ்
அறம்வாழ இனம்வாழ வாழி!

அண்ணனின் மணிவிழாக் காணும்—அந்த
ஆர்ப்பினை எம்முள்ளம் கொள்ளும்!
கண்ணுள்ள ஒளிப்பாவை போன்றோய்—எங்கள்
காப்பாக என்றென்றும் வாழி!

**புலவரேறு அரிமதி தென்னகன்**

# தமிழே வாழ்க!

இந்தநாள் தமிழர்க் கெல்லாம்
இன்பநாள்! எழுச்சிப் பொன்னுள்!
செந்தமிழ் இனத்தார் எல்லாம்
சிந்தை பூரிக்கும் நன்னுள்!
சந்தனப் பொதிகை தந்த
சங்கத்தமிழ் பிறந்து
வந்தநாள் நம் கலைஞர்
வையத்தில் பிறந்தநாளே!

இமயத்தில் பொறித்த கீர்த்தி
இடைக்காலத் தில் சிதைந்து
தமிழினம் அடிமைப் பட்டுத்
தாழ்ந்ததே! மீண்டும் நெஞ்சை
நிமிர்த்தியே தமிழர் பீடு
நடைபோட. உணர்ச்சி யூட்டும்
உமிழ்சுடர்ப் பரிதி ஒன்று
உதித்தநாள் சூன் மூன்றும்நாள்!



ஈரோட்டுச் சிங்கம், காஞ்சி
ஏந்தல்இவ் விருவரும் இப்
பாரினில் இல்லை யென்ற
பெருங்குறை பாட்டை இங்கே
ஓர்சொல்லில்—'உடன்பிறப்பே'
என்றழைக்கும் ஓர் சொல்லில்
தீர்த்துவைக்கும் தலைவன்
பிறந்தநற் றிருநாள் இந்நாள்!

கட்டாய இந்தி தன்னைக்
களத்தினில் எதிர்ப் பதற்குப்
பட்டாசுப் பருவந் தன்னில்
பட்டாளச் சிப்பா யாகி
''எட்டிநில் இந்திப் பேயே''
எனக்குரல் கொடுத்த அந்நாள்
தொட்டுஇந் நாள் வரைக்கும்
தொடர்கின்றுர் நாட்டுத் தொண்டை!

சீர்கெட்ட தமிழி னத்தின்
சிறுமைகள் போக்கு தற்குப்
போராட்டக் களத்தி லேதான்
பொழுதெல்லாம் கழிப்ப தாலே
ஆரூரான் வாழ்க்கை தன்னில்
அமைதியே இருந்த தில்லை!
போராட்ட மறவன் நெஞ்சோ
ஓர்தாயின் இரக்க நெஞ்சம்!

பனியெலாம் விலகும் நாளில்
பகைமுகில் கலையும் நாளில்
தனக்கென வாழாத் தூய
தலைவராம் கலைஞ ருக்கு
மணிவிழா என்று வையம்
மகிழ்ச்சிக்கூத் தாடும்! ஆழிப்
புனல்கூட இனிக்கும் அந்நாள்!
புவனமே துக் வாழ்த் கூறும்!

**கவிஞர் தனசேகரன்**


**7 கோடி தமிழ் மக்களின் எண்ணரும்
தலைவ, கலைஞ, நீவாழி!**

ஆலயம் தொழுவது
சாலவும் நன்று...
...பி.கே. ஆர். பத்திகளுடன்




எல்லோரும்
வாங்கக்கூடிய
குறைந்த விலையில் கிடைக்கும்
சிறந்த பத்திகள்


முல்லைப்பூ
தாழம்பூ
லேவண்டர்
பத்திகள்

தயாரிப்பாளர்கள் :
**பி.கே.ஆர். பேர்ப்யூமரி**
ராமர்கோவில் தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 641 009
போன் : 25263 • தந்தி : BEEKEYAAR

**M/s பாலு அண்டு கம்பெனி**
37, செந்தில் ஆண்டவர் வீதி,
தனலட்சுமி காலனி, வடபழனி,
சென்னை — 600026.

**தன்னிகரில்லா தங்கத் தமிழா! வாழ்க! வாழ்க!!**

TEXMO **டெக்ஸ்மோ**
மோட்டார் - பம்பு செட்டுகள




மற்றும் எல்லாவிதமான மின்சார சாதனங்கள் கிடைக்குமிடம்
**செல்வம் ஏஜன்ஸிஸ்**
23, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர்- 641 018
போன்: 26878



**கம்பம் என். இராமகிருஷ்ணன்**
எம். ஏ.

**தி. மு. க. தலைமை**
**பொதுக்குழு உறுப்பினர்**
**கம்பம், மதுரை மாவட்டம்**

**மணி விழா காணும்**
**டாக்டர் கலைஞர் அவர்களுக்கு**
**நல் வாழ்த்துக்கள்!**

**என். எஸ். பலராமன்**
முன்னாள் எம். எல் ஏ.
பட விநியோகஸ்தர் மற்றும் எக்ஸிபிட்டர்

அலுவலகம் : 6 மீரான்சாகிப் தெரு,
மவுண்ட்ரோடு, சென்னை-600001
போன் : 845767

வீடு : 17, ராமசாமி தெரு. தியாகராயநகர்,
சென்னை-600011 போன் : 445392



# பந்தயம் கட்டினுர் அண்ணு!

1959-ல் கழகம் முதன் முதலாக சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்துவது என்று தீர்மானித்தது.

தேர்வுக் குழுவின் தலைவராக கலைஞரை பணியாற்றுமாறு அண்ணு பணித்தார்.

கழகம் 20 அல்லது 30 இடங்களுக்கு போட்டியிட்டால் போதும் என அண்ணு கருதினுர்—கலைஞர் 90 வேட்பாளருக்கான பெயர் பட்டியலை அண்ணுவிடம் தந்தார்.

''90 பேர்களில் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று எண்ணுகிருய்?''—என அண்ணு கேட்க,

''நிச்சயம் 40 பேருக்குமேல் வெற்றியடைவார்கள்'' என்று கலைஞர் கூற ''அப்படி 40 பேர்கள் வெற்றியடைந்தால் நான் உனக்கு என் சொந்த செலவில் ஒரு கணையாழி அணிவிக்கிறேன்'' என்று அண்ணு கலைஞரிடம் ஒரு பந்தயம் கட்டினுர்.

தேர்தல் முடிவுகள் வந்தன. கழக சார்பில் 45 பேர் வெற்றி பெற்ருர்கள்.

15-4-59 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற மாநகராட்சி மன்ற வெற்றி விழாவில் அண்ணு அவர்கள் பந்தயத்தின் அடிப்படையில் கலைஞருக்கு கணையாழி அணிவித்து பேசினுர். அண்ணுவின் பேச்சு வருமாறு:


''நம்முடைய கருணுநிதி இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்த காரணத்தினுல் கழகம் பல இடங்களில் வெற்றி பெறும் என்று என்னிடம் சொன்னுர். முடியாது என்றேன் நான். அவசரப்பட்டுத்தான் சொல்லி விட்டேன். இப்போது வருத்தப் படுகிறேன். ''அப்படி வெற்றி பெற்ருல் என்ன தருவீர்கள்?'' என்று கருணுநிதி கேட்டார். நான் எதுவும் தர வேண்டிய அவசியம் இருக்காது என்ற எண்ணத்தில் 'ஒரு பவுனில் தங்கமோதிரம் போடுகிறேன்' என்று சொன்னேன். நான் என் மனைவிக்குக்கூட ஒரு நகை வாங்குவதற்காகக் கடைக்குப் போனது கிடையாது. ஆனுல் இன்று இந்த 45 பொல்லாத தோழர்கள் பெற்ற வெற்றியினுல் இந்த கட்டிளங் காளைக்கு நானே கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனுகிவிட்டேன்.

''நீங்களெல்லாம் மகிழத்தக்க அளவிலேயும் நான் கொஞ்சம் வருத்தப்படத்தக்க அளவிலேயும் இந்த மோதிரத்தை அவருக்கு அளிக்கிறேன். இந்த மோதிரம் அவரது உழைப்புக்குப் பலன் என்று அர்த்தமல்ல; மோதிரத்திற்கும் மேலான என்னுடைய உள்ளன்பை அவர் பெற்றிருக்கிருர் என்பதே அதற்குப் பொருள்.

''நண்பர்களே, நான் கணையாழி கொடுத்ததைப் பார்த்தீர்கள். அது தங்கமோ அல்லவோ என்று சந்தேகம் உங்களில் சிலபேருக்கு இருக்கலாம். உறுதியாக சொல்கிறேன். அது தங்கமேதான். நல்ல தங்கக் குணம் படைத்த கருணுநிதியிடம் அது செல்கிறது. அது அவருக்கு மேலும் மேலும் கீர்த்தியையும் அவர் பெறும் கீர்த்தியின் மூலம் நம்முடைய கழகத்திற்கு நல்ல பெருமையையும் நிச்சயம் தேடித்தரும்.''

---


**இமயம் முதல் குமரி வரை**
**போற்றிப் புகழும் கலைஞரே வாழி!**



**சாந்தா இண்டஸ்ட்ரியல்ஸின்**
**புதிய கண்டுபிடிப்பு'**
**கிரைண்டரை சாய்த்து**
**கைப்படாமல் அரைத்த மாவை**
**பாத்திரத்தில் கொட்டிவிடலாம்.**
**சாந்தா இண்டஸ்டிரியல்ஸ்**
**158, அவினசி ரோடு,**
**பீளமேடு, கோவை-4**
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

**பாராண்டு நலம் வளர்த்த**
**பகலவனே! ஏழையர்க்கு இனியவனே!**
**நூருண்டு நூருண்டு நீ வாழ்க!**
**சீராண்டு; சிறப்பாண்டு;**
**நீவாழிய வாழியவே!**





**ஆர். எஸ். ஸ்ரீதர்**
செயலாளர்
சைதைப் பகுதி தி. மு. க.
சென்னை

**கா. கிட்டு**
பொதுக்குழு உறுப்பினர்
தி. மு. க.
சைதை, சென்னை

